[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2022 ஏப்ரல் 22

எடுத்துச் செயல்பட்டீர்களோ, அதேபோன்று, இப்பொழுதும் நீங்கள் அந்த இரு கிராம மக்களிடமும் பேசி, இரு துறைகளினுடைய அலுவலர்களையும் நீங்களும் அணுக வேண்டும். அதற்கான முயற்சியை இந்தத் துறையும் மேற்கொள்ளும்.

7. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 4–5–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 48–போக்குவரத்துத் துறை மற்றும் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியன 5–5–2022 (வியாழக்கிழமை) அன்றும், 5–5–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகியன 4–5–2022 (புதன்கிழமை) அன்றும் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,180,22,35,000/,